**கவனிக்க.-** *2023.05.12 ஆந் திகதிய 2332 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி I: தொகுதி III, பகுதி II மற்றும் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2333 - 2023 මැයි මස 19 වැනි සිකුරාදා - 2023.05.19

*2333 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 178 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 178 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2023, யூன் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, மே மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


177 - B 082455 - 353 (2023/05)

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தலகள்

*இணைப்பு 09*

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேற்கு மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) இலங்கரத்ன பதிராஜகே நுவன் பிரசாத் திலகரத்ன ஆகிய நான் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1995.12.05 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர 51853 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான துத்திரிபிடிகம, ரதாகம எனும் முகவரியில் வசிக்கும் போம்புவல தேவகே மனுவெல் பிரனாந்து என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருஞாகல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் D 374/974/96 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.02.14 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்கு பின்னுறிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2023.06.11 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

குருஞாகல் நிர்வாக மாவட்டத்தின் பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் தேவமெதி பற்றில் திஸ்ஸவ கோறளையிலுள்ள 1358 - பலுகஸ்வெவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ரதாகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு இலக்கம்/ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/ என்பவரால் தயாரிக்கப்பட்டு/ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் எப். வி. பி. 2258 என்பவரால் தயாரிக்கப்பட்ட/இரேகை வரைதலில் 2/E ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டெயார்/ஏக்கர் 01 ரூட் - பேர்ச்சஸ் - விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: காணியின் பெயர் வீரகொல்லஹேன.

| | |
|---|---|
| வடக்கில் : | ஆர். பீ. டீ. ஆரியரத்ன என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள அரச காணியும்; |
| கிழக்கில் : | எஸ். எம். சாலி என்பவருக்கு சொந்தமான காணி; |
| தெற்கில் : | ஏ. டீ. ஜயவர்தன என்பவருக்கு சொந்தமான காணி; |
| மேற்கில் : | கிராம சபை வீதியும். |

ஐ. பீ. என். பீ. திலகரத்ன,
பிரதேச செயலாளர்/பிரதிக் காணி,
ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட),
பிரதேச செயலாளர் பண்டுவஸ்நுவர - மேற்கு.

2023.02.24

05 - 179

## நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல:- 4/10/72781.
மாகாண காணி ஆணையாளரின் இல -CPL/LC/LD/4/1/32/1185.

### காணி பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்.

நுவரெலியா மாவட்டம், நுவரெலியா பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட 477 ஏ அம்பேவெல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அம்பேவெல எனும் கிராமத்தில் அமைந்துள்ள இலக்கம் NU/NWE/2020/89 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கங்கள் N, AP, AR, BA, AZ, AV, AW, AX, AY, BE மற்றும் வரைபட இல. FSPP 54B பிற்சேர்க்கை 11 கொண்ட வரைபடத்தில் துண்டு இல. 160 இல் ஒரு பகுதியாக காட்டப்பட்ட 14.6588 ஜ ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள அரச காணியை விவசாய நோக்கத்திற்காக அம்பேவெல லைவ்ஸ் ஸ்டொக் கம்பனி லிமிடெட் எனும் பெயரில் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

- NU/NWE/2020/89 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் N க்கான எல்லைகள் - விஸ்தீரணம்: *1.7836* ஹெக்டேயர்

வடக்கு : FSPP 54B வரைபடத்தில் துண்டு இலக்கம் *196* இன் எஞ்சியது மற்றும் *180* இந்த வரைபடத்தில் கடத்திரள் வரைபட இல. M மற்றும் *1*;
கிழக்கு : M. *1* வீதி மற்றும் FSPP 54B வரைபடத்தில் துண்டு இலக்கம் *196* இன் எஞ்சியது ;
தெற்கு : FSPP 54B வரைபடத்தில் துண்டு இலக்கம் *196* இன் எஞ்சியது;
மேற்கு : FSPP 54B வரைபடத்தில் துண்டு இலக்கம் *196* இன் எஞ்சியது.

- NU/NWE/2020/89 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் AP கான எல்லைகள் - விஸ்தீரணம்: *2.8013* ஹெக்டேயர்

வடக்கு : AL, AK மற்றும் AQ;
கிழக்கு : AQ கரம்பு நிலம் மற்றும் AO;
தெற்கு : AQ கரம்பு நிலம் AO மற்றும் Z;
மேற்கு : கரம்பு நிலம் AO, Z, AI மற்றும் AJ.

- NU/NWE/2020/89 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் AR கான எல்லைகள் - விஸ்தீரணம்: *1.9666* ஹெக்டேயர்

வடக்கு : AL, AN, AS மற்றும் AQ;
கிழக்கு : AS, AU மற்றும் AV;
தெற்கு : AU, AW, AV கரம்பு நிலம் மற்றும் AQ;
மேற்கு : AV கரம்பு நிலம் மற்றும் AQ.

- NU/NWE/2020/89 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் AV க்கான எல்லைகள் - விஸ்தீரணம்: *1.2608* ஹெக்டேயர்

வடக்கு : கரம்பு நிலம், AR;
கிழக்கு : AR, AU மற்றும் AW;
தெற்கு : AW மற்றும் கரம்பு நிலம்;
மேற்கு : கரம்பு நிலம் மற்றும் AR.

- NU/NWE/2020/89 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் AW க்கான எல்லைகள் - விஸ்தீரணம்: *1.2166* ஹெக்டேயர்

வடக்கு : AV மற்றும் AU;
கிழக்கு : AU கரம்பு நிலம் AY மற்றும் AX;
தெற்கு : கரம்பு நிலம் AY, AX மற்றும் AV;
மேற்கு : AV.

- NU/NWE/2020/89 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்க AY க்கான எல்லைகள் - விஸ்தீரணம்: *0.0947* ஹெக்டேயர்

வடக்கு : AW மற்றும் AY;
கிழக்கு : AY;
தெற்கு : AY கரம்பு நிலம் மற்றும் AW;
மேற்கு : AW.

- NU/NWE/2020/89 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் AY க்கான எல்லைகள் - விஸ்தீரணம்: *0.3523* ஹெக்டேயர்

வடக்கு : AW மற்றும் கரம்பு நிலம்;
கிழக்கு : AW மற்றும் கரம்பு நிலம்;
தெற்கு : கரம்பு நிலம் மற்றும் AX;
மேற்கு : AX மற்றும் AW.

- NU/NWE/2020/89 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் AY க்கான எல்லைகள் - விஸ்தீரணம்: *0.2375* ஹெக்டேயர்

வடக்கு : BD;
கிழக்கு : கரம்பு நிலம்;
தெற்கு : கரம்பு நிலம்;
மேற்கு : கரம்பு நிலம மற்றும் BD.

- NU/NWE/2020/89 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் AZ க்கான எல்லைகள் - விஸ்தீரணம்: *2.3909* ஹெக்டேயர்

வடக்கு : AU, BA மற்றும் BB;
கிழக்கு : AU, BA, BB விதீ மற்றும் கரம்பு நிலம்;
தெற்கு : வீதி மற்றும் கரம்பு நிலம்;
மேற்கு : கரம்பு நிலம் AU, BA மற்றும் BB.

- NU/NWE/2020/89 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் BA க்கான எல்லைகள் - விஸ்தீரணம்: *1.0776* ஹெக்டேயர்

வடக்கு : BB;
கிழக்கு : AZ;
தெற்கு : AZ;
மேற்கு : AZ, AU மற்றும் BB.

- FSPP 54B பிற்சேர்க்கை *11* துண்டு இலக்கம் *160* இன் பகுதிக்கான எல்லைகள் - விஸ்தீரணம்: *1.4769* ஹெக்டேர்

வடக்கு : MSPP 103 துண்டு இலக்கம் *26*, *25* மற்றும் FSPP 54B பிற்சேர்க்கை *11* துண்டு இலக்கம் *161*;
கிழக்கு : MSPP 103 துண்டு இலக்க *25*, FSPP 54B பிற்சேர்க்கை *11* துண்டு இலக்கம் *161*, ஆரம்ப வரைபட இலக்கம் NU *85* கடத்திரள் வரைபட இல. *01*, FSPP 54B பிற்சேர்க்கை *11* துண்டு இலக்கம் *160* இன் எஞ்சியது;
தெற்கு : FSPP 54B பிற்சேர்க்கை *11* துண்டு இலக்கம் *160* இன் எஞ்சியது மற்றும் *180*;
மேற்கு : FSPP 54B பிற்சேர்க்கை *11* துண்டு இலக்கம் *180*.

*02*. குறித்த காணி கோரப்பட்ட தேவைக்கு குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது:

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (*2023.03.29* ஆம் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி)

**வருடாந்தக் குத்தகை.**- 2023 ஆம் வருடத்திற்கான காணியின் விலைமதிப்பீடு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் வளர்ச்சியடையாத பெறுமதியில் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் ஆண்டிற்கான காணியின் விலை மதிப்பீடு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த ஆண்டில் காணியின் வளர்ச்சியடையாத பெறுமதியில் 4% ஆகும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்த குத்தகையாக செலுத்தப்பமல் வேண்டும்.

**தவணைப்பணம்.**- அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட (01) காலத்திற்குள்ளாக மாகாண காணி ஆணையாளர்/உதவி காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக் காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) மாகாண காணி ஆணையாளர்/உதவி காணி ஆணையாளர்/ பிரதேசச் செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது, குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2023.03.29 குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அல்லது உரிமை மாறல் அனுமதிக்கப் படமாட்டாது. இதனத்துப் பின்னராயினும் இந்த நோக்கத்திற்கு மாத்திரமே கீழ்க்குத்தகை அல்லது உரிமை மாறல் மேற்கொள்ளக்கூடியதாய் உள்ளது;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுத்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் கோரிக்கையின்படி இக் குத்தகை வழங்கப்படும்.

கே. ஆர். மெத்மா ரணசிங்க,
உதவி காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
இல. 1200/6,
காணிச் செயலகம்,
"மிஹிகெத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, ஏப்பிறல் 25.

05 - 177

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்:- 4/10/72486.
மாகாண காணி ஆணையாளரின் இலக்கம்: - EP/28/LB/L-10/LS/TRI/T&G/239.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 243E, வில்கம கிராம உத்தியோகத்தர் பிரிவின் வில்கம கிராமத்தின் நிலவரைபட இலக்கம் 9 இனது காணித் துண்டு இலக்கம் A இன் மூலம் காட்டப்படுகின்ற 2.0235 ஹெக்டயர் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு வன் அபரல்ஸ் கூட்டுத்தாபனம் லிமிட்டெட் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரப்பட்ட நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:
காணிது துண்டு A இன் எல்லைகள் வருமாறு:
வடக்கு : பெரிய குளக்காட்டு புதர்க் காடு;
கிழக்கு : நிலவரைபட இலக்கம் Tri/TWG/2019/320 இனது காணித் துண்டு A இலிருந்து G - வரை மற்றும் பெரிய குளக்காட்டு புதர்க் காடு;
தெற்கு : அநுராதபுர - திருகோணமலை வீதி (R.D.A.);
மேற்கு : பெரிய குளக்காட்டு புதர்க்காடு.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது வருடங்கள் (2023.04.07 ஆம் திகதியிலிருந்து) வருடாந்த குத்தகைக் காலம்: 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00)

குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்.**- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(உ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.04.07 ஆம் திகதியிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்

கே. ஆர். மெத்மா ரணசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இல. 1200/6,
காணிச் செயலகம்,
"மிஹிகெத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, ஏப்பிறல் 25.

05 - 178

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல:- 4/10/70582.
மாகாண காணி ஆணையாளரின் இல: - என்சிபி/பிஎல்சி/எல்02/04/நொச்/நீ.கு.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்.

அநுராதபுர மாவட்டம் நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 355, ஹொரவில கிராம அலுவலர் பிரிவில் கல்கடவல கிராமத்தில் அமைந்துள்ளதும் காணி அலுவலரால் 355/24 NOC முடிக்குரிய காணி எனும் இலக்கமுடைய வரைபடத்திலான காணித்துண்டு இலக்கம் 01 எனக் குறிப்பிட்டுள்ள 1.5141 ஹெக்டயர் விஸ்தீரமுள்ளதுமாக அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டுத் திரு. சேனாதிபதி முதியன்சலாகே பாத்தியா சேனாதிபதி என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : அது எல;
கிழக்கு : அரச காணி;
தெற்கு : அரச காணி;
மேற்கு : கட்டபுவகம வீதி .

குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (2023.03.31 தொடக்கம் 30 வருடங்கள் முன்நோக்கி).

(ஆ) **வருடாந்த குத்தகை**.- 2023 ஆம் வருடத்தில் வருடத்திற்குமதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப்பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2023 ஆம் வருடத்தில் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியாக ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்காக பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும் . ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்.

**தவணைப்பணம்**.- அறவிடப்படமாட்டாது.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக மாகாண காணி ஆணையாளர்/பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேடநிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.03.31 ஆம் தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டி. டி. நவோத்யா சீ கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
இல. 1200/6,
காணிச் செயலகம்,
"மிஹிகெத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, ஏப்பிறல் 27.

05 - 180

---

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்:- 4/10/52095.
மாகாண காணி ஆணையாளரின் இலக்கம்: - LC/L/LL/KAM/545.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மாத்தறை மாவட்டம், கம்புறுப்பிட்டிய பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கத்தார கிழக்கு கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த கத்தார கிராமத்தின் இலக்கம் 516 இனையுடைய F. V. P. இனது காணித் துண்டு இலக்கம் 577 இனைக் காட்டுவதற்காக வரையப்பட்ட இலக்கம் 2120 மற்றும் 2004.05.23 திகதியையுடைய காணித் துண்டு A எனக் காட்டப்படுகின்ற 20 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித் துண்டினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு எடிசலாட் லங்கா தனியார் லிமிட்டெட்டானது குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : உள்நுழையும் வீதி;
கிழக்கு : குறித்த இடத்தின் எஞ்சிய பகுதி;
தெற்கு : குறித்த இடத்தின் எஞ்சிய பகுதி;
மேற்கு : வணிக சிந்தாமணி மொஹொட்டி லீலாவதிக்குச் சொந்தமான அளிப்புப் பத்திர காணி.

கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (2022.11.30 ஆம் திகதியிலிருந்து 2052.11.29 ஆம் திகதி வரை)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- கௌரவ அமைச்சரினால் அனுமதி வழங்கப்பட்ட குறித்த ஆண்டில் காணியின்

மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். கௌரவ அமைச்சரினால் அனுமதி வழங்கப்பட்ட வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.11.30 ஆம் திகதியிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
இல. 1200/6,
காணிச் செயலகம்,
"மிஹிகெத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, மே 03.

---

05 - 260

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்:- 4/10/70047.
மாகாண காணி ஆணையாளரின் இலக்கம்: - SPLC/MAT/1/1/28/3/106.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மாத்தறை மாவட்டம், பஸ்கொட பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 254, பஸ்கொட கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த பஸ்கொட கிராமத்தின் F. V. P. இலக்கம் 21 இன் காணித் துண்டு இலக்கம் 977 மூலம் காட்டப்படுகின்ற ஹெக்டயர் 0.1012 அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித் துண்டினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு சிறு அளவிலான தேயிலைகள் அபிவிருத்தி அதிகார சபையானது குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித் துண்டு இல. 978 மற்றும் 976;
கிழக்கு : காணித் துண்டு இல. 976 மற்றும் 978;
தெற்கு : காணித் துண்டு இல. 978;
மேற்கு : காணித் துண்டு இல. 978.

கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (2022.11.30 ஆம் திகதியிலிருந்து 2052.11.29 ஆம் திகதி வரை)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- கௌரவ அமைச்சரினால் அனுமதி வழங்கப்பட்ட குறித்த ஆண்டில் காணியின்

மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும். கௌரவ அமைச்சரினால் அனுமதி வழங்கப்பட்ட வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை சிறு அளவிலான தேயிலைகள் அபிவிருத்தி அதிகார சபையினது நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.11.30 ஆம் திகதியிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகையைத் தொடர்ச்சியாக செலுத்தாத சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட வேண்டிய நிலுவைப் பணத்தின் பொருட்டு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
இல. 1200/6,
காணிச் செயலகம்,
"மிஹிகெத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, மே 03.

05 - 261

---

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்:- 4/10/62421.
மாகாண காணி ஆணையாளரின் இலக்கம்: - SPLC/MAT/5/32/3/10.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மாத்தறை மாவட்டம், முலட்டியன பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 300A , ஹொரபாவிட்ட வடக்கு கிராம அலுவலர்பிரிவினைச் சேர்ந்த ஹொரபாவிட்ட கிராமத்தின் காணி உத்தியோத்தர் மூலம் வரையப்பட்ட நில வரைபடத்தின் மூலம் காட்டப்படுகின்ற 41 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித் துண்டினை சமுர்த்தி நடவடிக்கைகளின் பொருட்டு ஹக்மன பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : கும்புறுப்பிட்டிய தெய்யன்தர பிரதான வீதி;
கிழக்கு : உள்நுழையும் பாதை;
தெற்கு : கிராம சுகாதார அதிகாரியினது காரியாலயக் காணி;
மேற்கு : வை. கே. மிலியின் பரம்பரை காணி.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (2022.11.30 ஆம் திகதியிலிருந்து 2052.11.29 ஆம் திகதி வரை)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- கௌரவ அமைச்சரினால் அனுமதி வழங்கப்பட்ட குறித்த ஆண்டில் காணியின் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும்.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை சமுர்த்தி நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) கௌரவ அமைச்சரினால் அனுமதி வழங்கப்பட்ட திகதியிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
இல. 1200/6,
காணிச் செயலகம்,
"மிஹிகெத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, மே 03.

05 – 262